1978 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது, அதற்காக அமைக்கப் பட்டிருக்கிற குழு கூடி— அதில் தொழிற்சங்கத் தலைவர்கள் எல் லாம் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்— அவர்கள் எடுக்கக்கூடிய முடிவுக்கு ஏற்ப தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். குழுவின் தலைவர் தொழிலாளர் நல அமைச்சர்தான்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த வங்கியை ஏற்படுத்துவதற்கு இதுவரையிலும் அந்தக் குழு எவ்வளவு தொகை அனுமதித்துள்ளது ? இதுவரையிலும் ஏதேனும் அதற்காகச் செலவழிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : இந்தப் புஸ்தக வங்கிகள் ஏற்படுத்துவதால் புஸ்தகங்கள் தொழிலாளர் குழந்தைகளுக்கு இலவசமாகக் கொடுக் கப்படுமா ? அல்லது குறைந்த விலையில் வழங்கப்படுமா ? அப் படிப்பட்ட ஏற்பாடுகள் எந்த எந்த இடங்களில் இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த வருஷமே இப் பொழுது புஸ்தகங்கள் கிடைக்காத நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஏதாவது அந்த வங்கிகளில் செய்ய முடிந்ததா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இந்த வங்கிகள் அங்கு போய் படிப்பதற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடாகும். இந்த வெல்ஃபேர் பண்டில் பணத்திற்குப் பஞ்சம் இல்லை. எனவே நாம் எல்லாம்—குழு—உட்கார்ந்து பேசும் பொழுது விரிவான திட்டங்களை வகுத்து தொழிலாளர்கள் குழந்தைகளுக்குப் பலன் அளிக்கும் வகையில் செயல்படுத்த முயற்சி எடுக்கலாம்.

சிதம்பரம் நகருக்குக் குடி நீர் வழங்கல்.

*வினா எண் 210—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவுசெய்து விடையளிப்பாரா :

(அ) சிதம்பரம் நகரில் குடி தண்ணீர் குறையினை நீக்க பூஸ்டர் சிஸ்டம் அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

[1978 செப்டம்பர் 14

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிதம்பரம் குடிநீர்ப் பிரச்னையைப் பற்றி முன்பு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது பூஸ்டர் சிஸ்டத்தை அமுல் படுத்தப் போகிறோம். அதனால் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும் என்று பதில் அளித்தார்கள். ஆனால் விசாரித்த பொழுது அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இப்பொழுது அமைச்சரவர்கள் அந்தத் திட்டமே இல்லையென்கிறார்கள். அதை ஏற்படுத்த உத்தேசம் உண்டா? முதலிலே சொன்ன பதிலுக்கு அமைச்சரவர்கள் இப்பொழுது என்ன கூறுகிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி "......குடி தண்ணீர் குறையினை நீக்க பூஸ்டர் சிஸ்டம் அரசு ஆய்வில் உள்ளதா" என்பது. நான் இல்லையென்று சொன்னேன். வேறு முறை ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. முன்னால் குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உடனடியாக பழைய குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு ரூ. 20 இலட்சம் செலவில் நிர்மாணிக்கவும் ரூ. 53,000 ஆண்டு பராமரிப்புக்காகவும் திட்டமிடப்பட்டு அதற்கு அரசின் ஒப்புதல் பெற்று திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆரணி பேருந்து நிலையம்.

*வினா எண். 211—திரு. வீ. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா :

(அ) ஆரணி நகரத்தில் உள்ள பஸ் நிலையத்தினை தாலுக்கா அலுவலகத்திற்கு எதிரில் உள்ள திடலுக்கு மாற்றுமாறு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) & (ஆ) : கோரிக்கை ஒன்றும் வரவில்லை. வேலூர் மண்டல நகராட்சி ஆய்வாளரின் ஆலோசனையின் பேரில்தான் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற ஆணையர் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளார்.